Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்
EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 41

## தமிழ் இலக்கியங்களில் பெண்களின் பாவை விளையாட்டு

*முனைவர் இரா. பிரியதர்ஷினி*
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*ஜி.டி.என்.கலைக் கல்லூரி,*
*திண்டுக்கல்.*
*மின்னஞ்சல்: priyabalaji205@gmail.com*

## ஆய்வுச் சுருக்கம்

பழங்காலத்தில் மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள கையில் கிடைத்தவற்றை வைத்துக்கொண்டு போராடினான். அப்பொழுது அவன் பெற்ற பயிற்சி அவனது வீரத்தைப் புலப்படுத்த வகை செய்தது. இவ்வீரத்தோடு மனமகிழ்ச்சியும் சேர்ந்து வீரத்தை வளர்க்க, பொழுதுபோக்கை வரவேற்க எனப் பல நிலைகளில் விளையாட்டுகள் தோன்றின. இவை அந்தந்த மக்களின் பழக்கவழக்கங்களை வெளிப்படுத்தும் தன்மையில் அமைந்துள்ளன. இதில் பெண்களுக்கான விளையாட்டுகளுள் ஒன்றான பாவை விளையாட்டை இலக்கியங்களின் வழி எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## முன்னுரை

உடலுக்கும் உள்ளத்திற்கும் மகிழ்வூட்டுவது விளையாட்டாகும். மனிதன் உடல்நலத்துடன் வாழ விளையாட்டு இன்றியமையாதாகின்றது. விளையாட்டின் வழியாக மத நல்லிணக்கமும் நயத்தக்க நாகரிக நடைமுறைகளும் வழக்கிற்கு வந்தன. வீரம், உறுதி, ஊக்கம், உழைப்பு, நட்பு, இரக்கம், நேர்மை, அறம் என்னும் உயர்ந்த பண்புகள் யாவும் அனைவரின் உள்ளங்களிலும் விளையாட்டின் வழியாகவே ஊன்றி வளர்க்கப்பட்டன.

## விளையாட்டுகளின் வகைப்பாடுகள்

விளையாட்டு என்பது செயற்பாட்டினைப் பொறுத்தது அன்று. அது விளையாட்டில் ஈடுபடுவோரின் மனநிலையைப் பொறுத்தது.

"வேலை வேறு, விளையாட்டு வேறு ஆகும். கருத்தைக் கவருவது விளையாட்டு என்றும், கருத்தைக் கவராதது வேலை என்றும் கூறப்படுகிறது. இரண்டிலும் கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங்களும் உண்டு" (கலைக்களஞ்சியம், தொகுதி 9, ப.423.)

விளையாட்டுகளைப் பொதுவாக 'அகவிளையாட்டுகள்' என்றும் 'புறவிளையாட்டுகள்' என்றும் பிரிக்கலாம். இவ்வகையில் மகளிர் விளையாட்டுகளும், சிறுவர்கள் விளையாட்டுகளும் அகவிளையாட்டிலும் ஆடவர் விளையாட்டுகள் புறவிளையாட்டிலும் அடங்கும். மேலும் ஆண்பாலார் விளையாட்டுகள், பெண்பாலார் விளையாட்டுகள், இருபாலார் விளையாட்டுகள் எனவும் பிரித்துக் கூறலாம்.

விளையாட்டுகளை அவற்றின் தன்மையின் அடிப்படையிலும் பிரிக்கலாம். அவை, உடல் திறன், அறிவுத் திறன், வாய்ப்பு நிலை, மனமகிழ்ச்சி நிலை ஆகியன.

ஆடவர் விளையாட்டுகள் பெரும்பாலும் புறவிளையாட்டுகளாக உடல் திறனுக்கும் ஏற்றவைகளாகவே உள்ளன. இவை வீரத்தினை வெளிப்படுத்தும் வீரவிளையாட்டுகளாகத் திகழ்வதால் இவற்றில் பொழுதுபோக்கு நிலை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

அறிவுத் திறன் சார்ந்த வாய்ப்பு நிலை விளையாட்டுகள் மகளிரிடையே அதிகமாகக் காணப்படுகின்றன. சிறுவர், மரபாக வருகின்ற விளையாட்டுகளில் அதிகமாக ஈடுபடுவதோடு மன மகிழ்ச்சி நிலையை வெளிப்படுத்தும் விளையாட்டுகளிலும் ஈடுபடுகின்றனர்.

# தமிழர் விளையாட்டுக் கொள்கை

சங்க இலக்கியத்தில் காணப்படும் விளையாட்டுகளில் பெரும்பாலானவை இன்பத்திற்கு ஊறு விளைவிக்காத விளையாட்டுகளாகவே விளங்கின. அவை இன்பம் விளைப்பதையே தலையாய நோக்கமாகக் கொண்டிருந்தன.

*"நகை விளையாட்டு"* (குறுந். பா.364:6)

என்று குறுந்தொகையும்

*"நயந்து ஆடும் விளையாட்டு"* (அகம். பா.302:7)

என அகநானூறும் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து காப்பியங்களில்

*"இன்பக் காரணமாம் விளையாட்டு"* (குணமாலையார் இலம்பகம், பா.909:1)

என்று சீவகசிந்தாமணி குறிப்பிடுகின்றது. இன்பத்திற்குக் காரணமாக விளையாட்டு அமைந்தமையை இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதன்மூலம் சங்கத் தமிழர் வாழ்வியலில் விளையாட்டுகள் இணைந்திருந்தமையை உணர முடிகின்றது. ஒருவன் தன்னுடைய ஆளுமையை, ஆற்றலை வெளிப்படுத்திக் கொள்ள உதவுகின்ற பல நிலைகளில் விளையாட்டும் ஒன்றாக உள்ளது.

# விளையாட்டுக் களம்

பாரதியார் கண்ணன் பாட்டில் ஷதீராத விளையாட்டுப் பிள்ளை, கண்ணன் தருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை| என்று கண்ணன் தெருவில் விளையாடியதைப் பாடியுள்ளார். காடு, கழனிகளில் வேலைச் செய்து களைப்பவர்களுக்கு நிலவொளி நேரமே விளையாட்டு வேளையாக இருந்தது. பகலில் அறுவடை முடிந்த வயல்வெளி, மேய்ச்சல் நிலம் விளையாட்டுக் களமாக விளங்கினாலும், இரவில் தெருக்கள்தான் விளையாட்டுக் களமாக இருந்தது. ஆண்களுக்கு இன்று இருப்பது போல் அக்காலத்தில் உள்ளரங்க விளையாட்டுகள் இல்லை. பெண்களே கூடத்தில் சில விளையாட்டுகளை விளையாடி வந்தார்கள். தெருதான் விளையாட்டிடமாக இருந்தது என்பதற்கு இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன. கலித்தொகையில்,

*பெருந் திரு நிலைஇய வீங்கு சோற்று அகல் மனை*
*பொருந்து நோன் கதவு ஒற்றிப் புலம்பி யாம் உலமர*
*இயைவர் தமூஉ ஆடும் எக்கர் வாய் வியன் தெருவின்*
*விளையாட்டிக் கொண்டு வரற்கு எனச் சென்றாய்*
*உளைவுஇலை ஊட்டலென் தீம்பால் பெருகும் அளவெல்லாம்*
*நீட்டித்த காரணம் ஏன்* (கலி. மருதக்கலி, பா.83:1-6)

தலைவியின் குழந்தைக்குத் தோழி, தெருவில் விளையாட்டுக் காட்டி அழைத்து வருவதாக எடுத்துச் செல்கிறாள். நெடுநேரமாகியும் அவள் திரும்பி வராததால், தலைவியின் மார்பில்; பால் சுரந்து வழிகிறது. ஏன் காலங்கடத்தினாய் என்று தலைவி தோழியைக் கடிந்து கொள்கிறாள். இதனால் தெருதான் அன்று விளையாட்டுக் களமாக இருந்துள்ளது என்பதை இப்பாடல் விளக்குகின்றது.

## சங்ககாலப் பெண்களும் விளையாட்டுகளும்

சங்க காலத்தில் பெண்கள் மிக விருப்பத்தோடு விளையாட்டுகளில் ஈடுபாடுக் கொண்டிருந்தனர். இலக்கியங்களில் பெண்களுக்குரிய விளையாட்டுகளில் பாவை விளையாட்டு, பந்து விளையாட்டு, ஊசல், சிற்றில் அமைத்தல், வள்ளை, நீராடல், அம்மானை போன்றவை சிறப்பிடம் பெற்றுள்ளன. தாயம், பல்லாங்குழி, தட்டாங்கல், மஞ்சள் நீர் தெளித்தல், தென்னை மரத்து விளையாட்டு, கூட்டாஞ்சோறு ஆக்குதல் போன்றவை கிராமங்களில் இன்றும் பெண்கள் விளையாட்டுகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் உடல் வலிமையை வெளிப்படுத்தும் விளையாட்டுகளை விட அறிவு இயக்க விளையாட்டில் அதிகம் கவனம் செலுத்தியுள்ளனர். பெண்கள் ஆக்க சக்திக்கு மதிப்பு அதிகம் கொடுத்தனர். சிறுசோறு ஆக்கல், சிற்றில் அமைத்தல், செடி, கொடி வளர்த்தல், பாவை அமைத்தல் போன்றவை இதற்குச் சான்றாக அமைகின்றன. பெண்கள் மலர்களைக் கொய்து மாலை தொடுத்து விளையாடி தங்களின் அழகுணர்ச்சியை வெளிப்படுத்தினர். குறிஞ்சிப் பாட்டு மலர்களைக் கொய்து மனமகிழ்ந்த மகளிரது வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

சூடாமணி நிகண்டு ஓரை, பண்ணை, கெடவரல், பொய்தல், உண்டாட்டு, கிரீடை, உப்பு, கேளி, வண்டல், தொடலை என்பவற்றை மகளிர் விளையாட்டுகளாகச் சுட்டுகின்றது. இதனை,

*தொடலை உண்டாட்டுப் பொய்தல் சூழ்*
*விலாசனையே வண்டல் கெடவரல் பண்ணை*
*உப்புக் கிரீடையே கேளி, ஓரை*
*புடை முலையார் ஆடற் பேர்* (சூடாமணி நிகண்டு, பா.609:1-4)

எனவரும் அடிகளால் அறியலாம்.

கவண், கழங்கு, புள்ளோட்டல், வள்ளை முதலிய விளையாட்டுகள் பெண்களின் உடலழகையும் உடல் வலிமையையும் பேணுவனவாக அமைந்திருந்தன. நீர் விளையாட்டில் பெண்கள் ஆண்களோடு சமமாகக் கலந்து கொண்டுர். ஆண்களின் வீரத்தை நிலைநாட்டக் கூடிய ஏறுகோள் விளையாட்டிற்கு முதன்மையாக காளைகளை வளர்த்தனர். பெண்கள் தம் குழந்தைகட்கு வீரம் விளைவிக்கும் வரலாற்று கதைகளைச் சொல்லி குழந்தைகளின் ஆளுமைப் பண்புகள், உயர்ந்த சிந்தனைகள் வளரத் துணையாக இருந்தனர்.

## பாவை விளையாட்டு

'பாவை' என்னும் சொல் பல பொருள்களில் வழங்கப்பட்டாலும் சிறுவர் சிறுமியர் விளையாடும் விளையாட்டுப் பொருள்களில் ஒன்றான பதுமையையே இது அதிகம் குறிக்கிறது. இயற்கையில் கிடைத்த குரவமலர் கொண்டு பாவை செய்து விளையாடியதைக் 'குரவம் பாவை' என்ற தொடர் விளக்குகிறது. அன்று மணல், மலர், பவழம், முத்து, சிப்பி, பொன் முதலியன பாவை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாவை வைத்துச் சிறுமியர் விளையாடுவதை இலக்கியங்கள் காட்டுகின்றன. பரிபாடலில் உள்ள ஒரு பாடலில் வைகை ஆற்றில் புதுவெள்ளம் வந்ததையும் அவ்வாற்றில் மக்கள் நீராடச் செல்லும் போது கரையோரங்களில் கன்னிப் பெண்கள் மணலால் பாவை உரு ஒன்றை அமைத்து விளையாடுவதையும் அப்பாவையைப் புதுவெள்ளமானது சிதைத்து விடுவதையும் அதனைக் கண்டு அப்பெண்கள் அழுவதையும் பரிபாடல் குறிப்பிடுகிறது.

*“மாதர் மடநல்லார் மணலின் எழுதிய*
*பாவை சிதைத்தது என அழ”* (பரி. பா.7:25-26)

என்பது பாடல். இதனையே ஐங்குறுநூறும்,

*“தென்திரை பாவை வௌவ*
*உண்கண் சிவப்ப அழுது நின்றோளே”* (ஐங். பா.125:1-3)

என்று குறிப்பிடுகிறது. இவற்றால் பண்டைக் காலத்தில் பாவை வைத்து விளையாடும் விளையாட்டு இருந்திருப்பதை அறிய முடிகிறது.

## பாவையும் திறைப்பொருளும்

பாவைகளை பவழத்தால் தாமே செய்து விளையாடிய நிலையை, “பவழப்பாவை“ 'பாவை புனைந்தும்' என்று பெருங்கதை குறிப்பிடுகிறது. பிரச்சோதன மன்னன், தன் பகைவனான யவன அரசனிடமிருந்து. திறைப் பொருளுக்கு மாற்றாக அவனது மகளின் விளையாட்டுப் பாவையை வலிந்து கவர்ந்து எடுத்து வந்தான் என்றும் அதைத் தன் மகளுக்கு விளையாட வழங்கினான் என்றும் கூறுவதால், திறைப் பொருளைக் காட்டிலும் யவன நாட்டுப் பாவை உயர்ந்தது என்ற கருத்து பெறப்படுகிறது. இதனை,

*ஆடுதிரை முந்நீர் யவனத் தரசன்*
*கோடி வயிரமுங் கொடுப்புழிக் கொள்ளான்*
*சேடிள வனமுலைத் தன்மக ளாடும்*
*பாவை யணிதிறை தருகெனக் கொண்டு* (வத்தவ காண்டம், பா.வ. 89, 92-94)

என்ற பெருங்கதை பாடல் அடிகள் விளக்குகின்றன. பிரச்சோதனன் சீதனப் பொருட்களில் தன் மகளுக்கு இப்பாவையைத் தேடிக் கொடுத்தது பாவை விளையாட்டில் மகளிருக்கு இருந்த ஆர்வத்தைக் காட்டுகின்றது.

மேலும் வண்டற் பாவையிழைத்து மகளிர் கடலில் நீராடினமையையும் ஆற்றில் பாய்ந்தாடினமையையும் மகளிர் செய்த பாவைக்குத் தாம் கொய்த பூவைச் சூட்டினமையையும் சங்க இலக்கியங்களால் அறிய முடிகின்றது.

பாவை உருவுக்குப் பூங்கொத்துச் சூடுவதும், புறநானூற்றுப் பாடல்களில் காணப்படுகின்றது. சேர நாட்டிலுள்ள இளமங்கையர் குளிர்ந்த பொருணையாற்றில் பாய்ந்து நீராடிக் கரையிலுள்ள மணலில் பாவையின் உருவைச் செய்து அப்பாவைக்குக் கோட்டுப்பூவைச் சூடி வழிபட்டார்கள் என்னும் செய்தியை,

*வால் இழை மட மங்கையர்*
*வரி மணல் புனை பாவைக்குக்*
*குலவுப் பொருநைப் புனல் பாயும்*
*தண் பொருநைப் புனல் பாயும்* (புறம், பா.11:2-5)

என்ற புறநானூற்று வரிகளால் அறியலாம்.

பாவை விளையாடிய மகளிர் அதனைத் தன் மகளெனவே கருதினர் என்று அகநானூறு குறிப்பிடுகிறது. இதனை 'ஈனாப் பாவை' என்று நற்றிணையும் 'உண்ணாப் பாவை' என்று ஐங்குறுநூறும் கூறுகின்றது.

## பந்தும் பாவையும்

பண்டைக் காலத்தில் மன்னர்கள் பகைவரின் பொருட்டுத் தம் அரண்மனை முற்றத்தில் உள்ள கொடியை அறுத்து அதன் அருகே பந்தையும் பாவையும் தொங்கவிடுவர். அவ்வாறு அவர்கள் செய்வதன் கருத்து "எம்மை வெல்லும் ஆண்மையாளர் எவரும் இலர். எம் பகைவரை யாம் பெண்டிர் போலக் கருதுகின்றோம். ஆண்மையாளர் உண்டென்றால் இவற்றை அறுங்கள்" என்னும் குறிப்பை இது வெளிப்படுத்துகிறது.

*"பந்து நிலத்து எறிந்து பாவை நீக்கி"* (நற். பா.179:2)

*"பந்தும் பாவையும் கழங்கும் எமக்கு ஒழித்தே"* (ஐங். பா.377:4)

*"அலவன் ஆட்டியும் உரவுத்திரை உழக்கியம்*
*பாவை சூழ்ந்தும்"* (பட்டின. பா.வ. 101-102)

என்ற வரிகளின் மூலம் பந்தும் பாவையும் பெண்கள் விளையாட்டுகளாக இருந்தமைப் புலப்படுகின்றது. திருவாசகத்தில் இடம்பெறும் திருப்பள்ளி எழுச்சி என்ற பகுதியில்,

*முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்*
*மூவரும் அறிகிலர் யாவர்மற்(று) அறிவாம்*
*பந்தணை விறலியும் நீயும்நின் அடியார்*
*பழங்குடில் தொறும் எழுந்(து) அருளிய பரனே* (திரு. பா.375:1-4)

என்ற வரிகள் உமையம்மையின் பந்து விளையாட்டைக் குறிப்பிடுகிறது.

நாம் வணங்கும் இறைவனுக்கு எத்தனை கைகள் உள்ளனவோ, அவையனைத்திலும் ஏதேனும் படைக்கலனோ, முத்திரையோ இடம்பெற்றிருக்கும். அந்த இலக்கணப்படி அம்பாள் கைவிரலொன்றல் பது இருப்பதைச் சுட்டிப் பாடுகிறார் மாணிக்கவாசகர். இந்த செய்தியை திருவாசகம் வாழாப்பத்தில்,

*பந்தனை விரலாள் பங்கநீ அல்லால்*
*பற்றுநான் மற்றிலேன் கண்டாய்*
*செந்தழல் போல்வாய் சிவபுரத்(து) அரசே*
*திருப்பெருந் துறையுறை சிவனே* (திரு. ப.455:1-4)

என்று உமைஅம்மையார் விரலில் பந்தைப் பிடித்திருப்பதைக் கூறுகிறார்.

பந்து விளையாட்டு பழங்காலந்தொட்டே தமிழ் நாட்டில் வழக்கில் இருந்துள்ளதென்பதைப் புராணங்களாலும், இலக்கியங்களாலும் அறியலாம். கம்பர் தனது காவியமான இராம காதையில் பாலகாண்டம் நகரப்படப்படலத்தில்,

*கரியொடு கரியெதிர் பொருத்திக் கொண்ட*
*வரிசிலை முதலிய வழங்கி வாலுளைப்*
*புரவியிற் பொருவில்செண் டாடிப் போர்க்கலை*
*தெரிதலிற் பொழுபோஞ் சிலர்க்கச் சேணகர்*

(கம்ப.பாலகாண்டம், நகரப்படலம், பா.68:1-4)

என்ற அடிகளில் குரை மீதமர்ந்து பந்து விளையாடிய செய்தியைக் குறிப்பிடுகிறார்.

சீவக சிந்தாமணியில் மயிலொத்த பெண்கள், தத்தம் கைகளை வலப்பக்கமும், இடப்பக்கமும் அசைத்துத் தம் தோழிமார்களிடையே வளைந்தோடிப் பந்தாடுவதாகப் பாடுகிறார் திருத்தக்கத்தேவர். இதனை,

*துணையில் தோகை மஞ்ஞை ஈயற் கிவரும் வகை போல்*
*மணியார் வளைசேர் முன்கை வலனும் இடனும் நோக்கி*
*இணையில் தோழி மார்கள் இறுமால் இடையென் றிரங்கு*
*அணியார் கோதை பூம்பந்தாடு மவளைக் காண்மின்*

(சீவக. குணமாலையார் இலம்பகம், பா.925:1-4)

என்ற பாடலடிகளில் குறிப்பிடுகின்றார்.

பந்து விளையாட்டில் ஒரே பந்தை வைத்து விளையாடிய நிலை மாறி பல பந்துகளைத் தொடர்ந்து மேலே இட்டு கீழே விழாமல் பிடித்து தனது திறமையைக் காட்டும் தொடர்பந்து அல்லது சங்கிலித் தொடர் பந்து விளையாட்டு மலர்ந்தது என்பதை திருமழிசையாழ்வார்,

*பந்து ஆர் விரலாள் பாஞ்சாலி*
*கூந்தல் முடிக்க, பாரதத்து*
*கந்து ஆர் களிற்றுக் கழல் மன்னர்*

*கலங்க சங்கம் வாய் வைத்தான்* (நா.தி.பி, பா.எ:1515:1-4)
என்ற பாடடிகளில் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

விளையாட்டுகள் மக்கள் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து காணப்படுகின்றன. பெண்களுக்கான விளையாட்டுக்கள் காப்பியங்களிலும், சிற்றிலக்கியங்களிலும், புராணங்களிலும் இடம்பெற்றுள்ளன.

இன்பம் பெறுவதற்காகவே விளையாட்டு என்ற கொள்கையே தமிழர் விளையாட்டுக் கொள்கையாக இருந்தது புலனாகின்றது.

சங்க இலக்கியத்திலுள்ள விளையாட்டுகள் பெரும்பாலும் பெண்களுடன் தொடர்புடையனவாகவே விளங்கின. பெண்கள் மிக விருப்பத்தோடு விளையாட்டுகளில் ஈடுபாடுக் கொண்டிருந்தனர். அவ்விளையாட்டுகளில் பாவை விளையாட்டு சிறப்புடன் விளங்கியமை அறிய முடிகின்றது.

## துணைநின்ற நூல்கள்


1. அவினாசிலிங்கம்,தி.சு.,(1963),கலைக்களஞ்சியம் (தொகுதி ஒன்று), தமிழ் வளர்ச்சிக்
2. கழகம், சென்னை.
3. சுப்பிரமணியன்,ச.வே.,(ப.ஆ.)(2008),தமிழ் நிகண்டுகள் (முதல் தொகுதி),
4. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
5. சோமசுந்தரனார்.பொ.வே.,(உ.ஆ.)(1963),பெருங்கதை,திருநெல்வேலி தென்னிந்திய
6. சைவசித்தாந்த நூற்பதிப்புக கழகம்,சென்னை.
7. 4. நாராயணவேலுப்பிள்ளை,எம்.,(உ.ஆ.)(1993),திருவாசகம்,வர்த்தமானன் பதிப்பகம்,
8. சென்னை.
9. 5. பாலசுப்பிரமணியன்,கு.வெ.,(உ.ஆ.),(2004),சங்க இலக்கியம்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
10. சென்னை.
11. 6. ஸ்ரீசந்திரன். ஜெ., (உ.ஆ.),(1996),சீவக சிந்தாமணி (மு.தொ.),தமிழ் நிலையம்,சென்னை.